ஆறு மாதச் சிகிச்சையில் நலம் மற்றோருக்கு
கூறுக குணமடையும் காசத்தை
விறு விறுவென இன்றே செயலுறுவீர்
மறு வில்லா வாழ்வு வையகத்தில் வாழ்ந்திடலாம்
பாலமிது பாலமிது
பல்துறைசார் பார்வையுடன்
காசநலன் மேன்பாட்டு நலத்துறையின் காலமிது
கோசமிது கோசமிது கேளீரே இன்று

தாளமிது தாளமிது
தரணியிலே காசஇறப்பில்
காலமிது காலமிது
மழலைக் காசமகலும் காலமிது.

நேசத்தால் சுகநலத்தின் சிகிச்சையிது
மேதினியில் நேரத்தில் செய்திடுவோம்
பாதியிலே சிகிச்சையினை நிறுத்தாதீர்
நாதியற்றுப் போகும் வாழ்வு
ஆதியிலே தோன்றிய காசப் பிணியினையே
அநாதி ஆக்கிடவே அர்ப்பணிப்போம்
நீதியுடன் எமக்கு அனுசரணை தாரீர்
பீதியில்லாது பிணியினை அகற்றுவோமே.



WWW.TUBERCULOSISJAFFNA.COM

**வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்கம்**
**யாழ்ப்பாணம்**

# உலக காசநோய் தினம்

**24.03.2019**




## காலமிது

காலமிது காலமிது
காசம் அகலும் காலமிது
நேரமிது நேரமிது
நேர்மையுடன் சேவை புரிந்திடுவோம்
குவளயத்தில் பிரளயத்தை
காசத்தால் காவாதே
கோலமிது கோலமிது
தொற்றினையே அற்றி இனிதே.

இருமல் சளி காய்ச்சல் களைப்பு
அவற்றுடன் உடல் மெலிவு உதிரச்சளி
காசத்தின் அறிகுறிகள் காண்
நோயறிகுறி உடன் உற்றால் இன்றே
நுண்காட்டிச் சளிச்சோதனை இன்றே
எந்திரச் சளிச்சோதனை நெஞ்சு
ஊடுகதிர்ச் சோதனை, தோற் சோதனை நன்றே.

காசத்தை துருவி அறியும் சோதனை
நோயுற்றோர் உடன் உற்றால் இன்றே
மாலைக் காய்ச்சல், இருமல், உடல் மெலிவு
சளியுடன் உதிரம் உணவில் விருப்பமின்மை
ஒளியுள்ள எதிர்கால சமூகநலன் பேணும்
காசநலன் நோக்கும் சுட்டி காண்.



# இரு கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்பின் சளிப் பரிசோதனை அவசியம்

தூசுகளில் வேலை செய்வோர் முகக் கவசம் அணிதல் அவசியம்

ஒழுங்காக காசநோய்த் தடுப்பு மருந்துகளை உள்ளெடுப்பதால் காசநோயினை முற்றாகக் குணப்படுத்தலாம்

## காசநோய்க்கான சிகிச்சை முற்றிலும் இலவசம்

Printed By: Jeyasri. 021 221 9129

WWW.TUBERCULOSISJAFFNA.COM

வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்கம்
யாழ்ப்பாணம்